அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்,

அரண்வாயல் குப்பம்,

திருவள்ளூர் மாவட்டம் - 602 025

**சுற்று மடல் எண்: 73** **நாள் : 18.12.2020**

**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**நெஞ்சம் நிறைந்து அன்போடு உங்களை வாழ்த்துகிறேன்.**

கிறிஸ்துமஸ் பெருவிழாவிற்கு அனைவரும் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

கிறிஸ்து பிறப்பு என்பது உலகுக்கு நம்பிக்கை வெளிச்சமாக விடிந்த நிகழ்வு.

இந்த நம்பிக்கை ஒளியில் அச்சம் அகலும் அவநம்பிக்கை அழியும்

நம்பிக்கை துளிர்க்கும் நலம் பெருகும்.

என்ன தடைகள் வந்தாலும் அதையும் தாண்டி

புதிய திட்டங்கள் உருவாகும்.

நாம் திட்டமிட்டது போல் நடக்கவில்லையே என்று

மலைத்துப்போய் நிற்போருக்கு இன்னும் கிறிஸ்து பிறப்பு நிகழவில்லை.

திட்டங்கள் தடைபட்டாலும் திட்டமிட்டபடி நடப்பது இயலாததானாலும்

கிறிஸ்து பிறப்பில் நம்பிக்கை கொண்டோருக்குப்

புதிய திட்டமிடல் வீரியத்தோடு எழுந்து நிற்கும்.

இதன் அடிப்படையில் கிறிஸ்து பிறப்பின் நம்பிக்கையாளர்களாகிய

நம் மெகா கிறிஸ்துமஸ் விழா

மிகமுக்கிய காரணத்தை முன்னிட்டு 21.12.2020-க்கு மாற்றப்பட்டுள்ளது.

டிசம்பர் 22 அன்று Tancean General Body Meeting நடைபெறுவதால்

அதற்குக் கல்விப்பணி சகோதரிகள் கலந்து கொள்வது அவசியம்

என்பதைக் கருத்தில் கொண்டு

நமது Mega Xmas Celebration

21.12.2020.திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தயவு கூர்ந்து மாற்றத்தைக் கருத்தில் கொண்டு ஆவன செய்து கொள்ளுங்கள்.

**சகோதரிகளின் கனிவான கவனத்திற்கு:**

- ★ நமது Online விழாவின் நோக்கம் சபைச் சகோதரிகள் அனைவரையும் சந்தித்து நம் சகோதர வாஞ்சையைப் பகிர்ந்து கொள்வதே.
- ★ முடிந்த வரை network சரியாகக் கிடைக்கும் இடத்தைத் தேர்வு செய்து அமருங்கள். அதற்கு ஏற்ற முறையில் இருக்கைகளை அமைத்துக் கொள்ளுங்கள்.
- ★ உங்கள் குழுமத்திற்கான நேரம் மிகச் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளது. நேரத்தைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் பொறுப்பு. நேரத்தைப் பற்றிய புரிதல் மிகமிக முக்கியம். ஒரு Second நேரத்தைக் கூட விரயம் செய்யாதீர்கள். உங்கள் வாய்ப்பைக் கை நழுவ விட்டுவிடுவீர்கள்.
- ★ மிகத் துல்லியமாக Time Schedule கொடுக்கப்பட்டுள்ளதால் உங்கள் நேரம் முடிந்த பின் Automatic ஆக உங்கள் வாய்ப்பு முடிந்துவிடும்.
- ★ எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டியதிருப்பதால் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாய்ப்பு கடந்துவிட்டால் தயவு செய்து புரிந்து கொண்டு அமைதியடையுங்கள். வேறு வழியில்லை. எனவே சரியாக ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.
- ★ எல்லோரின் நிகழ்ச்சிகளையும் அனைவருமே காண வேண்டும். எனவே உங்கள் நிகழ்வு முடிந்ததும் சென்று விடாதீர்கள்.
- ★ காலை 8.30 முதல் நீங்கள் Log in செய்யலாம்.
- ★ 9 மணிமுதல் உங்கள் அனைவரின் Audio mute செய்யப்படும். உங்கள் வாய்ப்பு வரும் போது மட்டும் Audio unmute செய்யப்படும். அவசியமின்றி Audio வை unmute செய்ய வேண்டாம்.
- ★ Audio - வை mute செய்யாமல் பேசிக் கொண்டிருப்பது, Mobile Attend செய்வது கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும்.
- ★ Coordinators தயவு கூர்ந்து இதனைக் கவனித்துக் கொள்ளுங்கள்.
- ★ உங்கள் நிகழ்ச்சிகள் 5 நிமிடம் என்றால் Settle ஆக 1 நிமிடம் தேவைப்படும் என்பதால் 4 நிமிடங்கள் மட்டுமே நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளுங்கள். 3 பேர் உள்ள குழுமங்களுக்கு 3 நிமிடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கும். தயவு செய்து 2 நிமிடம் பயன்படுத்துங்கள்.
- ★ முன்கூட்டியே Rehearsal செய்து அனைத்தையும் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.
- ★ இது நமது முதல் முயற்சி. இனி வருங்காலங்கள் Online Communication அதிகமாகத் தேவைப்படும். அந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சி இது. அருள் கூர்ந்து அனைவரும் ஒத்துழைக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
- ★ Interval செல்வோர் வெளியே செல்வோர் Video - வை mute செய்துவிட்டு எழுந்து செல்லுங்கள். சத்தம் இடைஞ்சல் இல்லாமல் Coordinators பார்த்துக் கொள்ளுங்கள்.

# *Online Mega Christmas Celebration – 2020*

**நாள்** : 21.12.2020 Monday

**நேரம்** : காலை 9.15 முதல் 1.30 வரை

மாலை 2.30 முதல் 4.30 வரை

**Log in Time**: 8.30 A.M to 9A.M

Foreign சகோதரிகள் மட்டும் மதியம் Login செய்வார்கள்.

Time Schedule for the groups இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கவனமாகக் கருத்தில் கொள்ளுங்கள்.

**உங்கள் ஒவ்வொருவருக்கும் நெஞ்சம் நிறைந்து அன்போடு**

**கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.**

**கிறிஸ்துமஸ் நம் வாழ்வில் விடியட்டும்!**

**அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**